**Volume 1 ஒரு மதிப்பெண் வினாக்கள் மற்றும் பதில்**

12th Standard

வேதியியல்

1) ஹால் ஹெரால்ட் செயல்முறையின்படி பிரித்தெடுக்கப்படும் உலோகம்
(a) Al (b) Ni (c) Cu (d) Zn

2) ஒடுக்க வினைக்கு உட்படுத்தும் முன்னர், சல்பைடு தாதுக்களை வறுத்தலில் ஏற்படும் நன்மையினைப் பொருத்து பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?
(a) $CS_2$ மற்றும் $H_2S$ ஆகியவற்றைக் காட்டிலும் சல்பைடின் $\Delta G_f^0$ மதிப்பு அதிகம்
(b) சல்பைடை வறுத்து ஆக்ஸைடாக மாற்றும் வினைக்கு $\Delta G_r^0$ எதிர்க்குறியுடையது.
(c) சல்பைடை அதன் ஆக்ஸைடாக மதிப்புவறுத்தல் என்பது ஒரு சாதகமான வெப்ப இயக்கவியல் செயல்முறையாகும்.
(d) உலோக சல்பைடுகளுக்கு, கார்பன் மற்றும் ஹைட்ரஜன் ஆகியன தகுந்த பொருத்தமான ஒடுக்கும் காரணிகளாகும்.

3) பின்வருவனவற்றுள் எத்தனிம பிரித்தெடுத்தலின் மின்வேதி முறை பயன்படுகிறது.
(a) இரும்பு (b) லெட் (c) சோடியம் (d) சில்வர்

4) இளக்கி (flux) என்பது பின்வரும் எம்மாற்றத்திற்கு பயன்படுத்தப்படுகிறது?
(a) தாதுக்களை சிலிக்கேட்டுகளாகமாற்ற (b) கரையாத மாசுக்களை, கரையும் மாசுக்களாக மாற்ற (c) கரையும் மாசுக்களை கரையாத மாசுக்களாக மாற்ற (d) மேற்கண்டுள்ள அனைத்தும்

5) ZnO விலிருந்து துத்தநாகம் (Zinc) பெறப்படும் முறை
(a) கார்பன் ஒடுக்கம் (b) வெள்ளியைக் கொண்டு ஒடுக்குதல் (Ag) (c) மின்வேதி செயல்முறை (d) அமிலக் கழுவுதல்

6) பின்வருவனவற்றுள் எந்த உலோகத் தூய்மையாக்களில் புடமிடுதல் (Cupellation) பயன்படுகிறது.
(a) வெள்ளி (Silver) (b) காரீயம் (lead) (c) தாமிரம் (Copper) (d) இரும்பு (iron)

7) மின்னாற்பகுத்தல் முறையில் காப்பரை தூய்மையாக்குவதில், பின்வருவனவற்றுள் எது நேர்மின்வாயாக பயன்படுத்தப்படுகிறது?
(a) தூயகாப்பர் (b) தூய்மையற்ற காப்பர் (c) கார்பன் தண்டு (d) பிளாட்டினம் மின்வாய்

8) பின்வருவனவற்றுள் எந்த வரைபடம்? எலிங்கம் வரைபடத்தினைக் குறிப்பிடுகிறது.
(a) $\Delta S$ Vs T (b) $\Delta G^0$ Vs T (c) $\Delta G^0$ Vs $\frac{1}{T}$ (d) $\Delta G^0$ Vs $T^2$

9) எது இரும்பின் தாது அல்ல?
(a) ஹேமடைட் (b) மேக்னடைட் (c) சிடிரைட் (d) ஆங்லசைட்

10) எது சில்வரின் தாது?
(a) அசுரைட் (b) பிரௌசிடைட் (c) செருசைட் (d) லிமோனைட்

11) நுரை மிதப்பு முறையில் அடர்ப்பிக்கப்படும் தாது வகை
(a) ஆக்சைடு தாது (b) சல்பைடு தாது (c) கார்பனேட் தாது (d) சல்பேட் தாது

12) வெப்ப இயக்கவியல் கொள்கைகளின் படி உலோக ஆக்சைடை கொடுக்கப்பட்ட ஒரு ஒடுக்கம் காரணியுடன் சேர்த்து ஒடுக்க வேண்டுமெனில், இணைக்கப்பட்ட வினைகளின் கட்டிலா ஆற்றல் மாற்றம் ________ மதிப்பினை பெற்றிருக்க வேண்டும்.
(a) நேரக்குறி (b) எதிர்க்குறி (c) ஒன்று (d) பூஜ்யம்

13) உலோக ஆக்சைடை உலோகமாக ஒடுக்க, இணைக்கப்பட்ட வினையில் கட்டிலா ஆற்றல் மாற்றம் ________ பெறும் வகையில், ஒடுக்கும் காரணியாக

தெரிவு செய்யப்படுகிறது.

(a) அதிக நேர்க்குறி மதிப்பினை (b) குறைந்த நேர்க்குறி மதிப்பினை (c) அதிக எதிர்க்குறி மதிப்பினை (d) குறைந்த எதிர்க்குறி மதிப்பினை

14) வெப்பஇயக்கவியலின்படி, கார்பனின் அதிக நிலைப்புத்தன்மையுடைய வடிவம்

(a) டைமண்ட் (b) கிராபைட் (c) ஃபுல்லரீன் (d) இவை எதுவுமல்ல

15) பின்வருவனவற்றுள் எவ்வரிசையில் +1 ஆக்சிஜனேற்ற நிலையின் நிலைப்புத் தன்மை அதிகரிக்கின்றது.

(a) Al < Ga < In < Tl (b) Tl < In < Ga < Al (c) In < Tl < Ga < Al (d) Ga < In < Al < Tl

16) அயனியாக்கும் ஆற்றல் குறையும் போது, தனிமங்களின் உலோகத்தன்மை

(a) குறைகிறது (b) அதிகரிக்கிறது (c) மாறாமல் உள்ளது (d) பூஜ்யமாகிறது

17) p - தொகுதியில் உலோகங்கள் காணப்படும் இடம்

(a) வலது புறம் மேற்பகுதி (b) நடுப்பகுதி (c) இடது புறம் கீழ்ப்பகுதி (d) தொகுதியின் கீழ்ப்பகுதி

18) p - தொகுதி தனிமங்களின் முக்கியமான பண்பு

(a) அணைவுச் சேர்மம் உருவாக்குதல் (b) நிறமுள்ள அயனிகளை உருவாக்குதல் (c) மந்த இணை விளைவு (d) உலோகதத்தன்மை

19) அதிக நிலைப்புத் தன்மை கொண்ட கார்பனின் புறவேற்றுமை வடிவம்

(a) கிராஃபைட் (b) வைரம் (c) ஃபுல்லரீன் (d) கார்பன் நுண் குழாய்கள்

20) $CO_2$ மூலக்கூறின் அமைப்பு

(a) முக்கோண வடிவம் (b) நான்முகி வடிவம் (c) நேர்கோட்டு வடிவம் (d) சதுர தள வடிவம்

21) கார்பன் டை ஆக்சைடின் நீர்க்கரைசல் சற்றே ______ தன்மை கொண்டது.

(a) அமிலத் (b) காரத் (c) ஈரியல்புத் (d) நடுநிலைத்

22) ஸ்பொடுமின் என்பதன் வாய்பாடு

(a) $Sc_2Si_2O_7$ (b) $Li\ Al(SiO_3)_2$ (c) $[Be_3Al_2(SiO_3)_{6]}$ (d) $Be_2SiO_4$

23) (A) என்ற திண்மம் நீர்த்த வலிமைமிகு NaOH கரைசலுடன் வினைபுரிந்து அருவருக்கத்தக்க மணமுடைய வாயு (B)ஐத் தருகிறது. (B) யானது காற்றில் தன்னிச்சையாக எரிந்து புகை வளையங்களை உருவாக்குகிறது. (A) மற்றும் (B) முறையே

(a) $P_4$ (சிவப்பு) மற்றும் $PH_3$ (b) $P_4$ (வெண்மை) மற்றும் $PH_3$ (c) $S_8$ மற்றும் $H_2S$ (d) $P_4$ (வெண்மை) மற்றும் $H_2S$

24) பழுப்பு வளையச் சோதனையில் உருவாகும் வளையத்தில் பழுப்பு நிறத்திற்கு காரணமாக அமைவது

(a) NO மற்றும் $NO_2$ கலவை (b) நைட்ரசோ ஃபெர்ரஸ் சல்பேட் (c) பெர்ரஸ் நைட்ரேட் (d) பெர்ரிக் நைட்ரேட்

25) கூற்று: குளோரின் வாயுவைக் காட்டிலும் ஃ புளுரினின் பிணைப்பு பிளவு ஆற்றல் அதிகம்.

காரணம்: குளோரினானது, ஃபுளுரினைக் காட்டிலும் அதிக எலக்ட்ரான் விலக்கு விசையினைப் பெற்றுள்ளது.

(a) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமாகும். (b) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமல்ல. (c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு. (d) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

26) பின்வருவனவற்றுள் வலிமையான அமிலம் எது?

(a) HI (b) HF (c) HBr (d) HCl

27) ஹாலஜன்களின் பிணைப்பு பிளவு என்தால்பி மதிப்பினைப் பொறுத்து சரியான வரிசை எது? (NEET)
(a) $Br_2 > I_2 > F_2 > Cl_2$ (b) $F_2 > Cl_2 > Br_2 > I_2$ (c) $I_2 > Br_2 > Cl_2 > F_2$ (d) $Cl_2 > Br_2 > F_2 > I_2$

28) பூமியில் வளிமண்டலத்தில் அதிகம் காணப்படும் வாயு ________
(a) $O_2$ (b) $N_2$ (c) $H_2$ (d) $CO_2$

29) ஹேபர் தொகுப்பு முறையில் தயாரிக்கப்படும் சேர்மம்
(a) $NO_2$ (b) $HNO_3$ (c) $NH_3$ (d) $N_2O$

30) நைட்ரிக் அமிலத்தை வணிக ரீதியாக தயாரிக்கும் முறை
(a) ஹேபர் முறை (b) டெக்கான் முறை (c) தொடு முறை (d) ஆஸ்வால்ட் முறை

31) வெண்பாஸ்பரஸ் ________ல் பாதுகாக்கப்படுகிறது.
(a) மண்ணெண்ணெய் (b) நீர் (c) ஆல்ஹகால் (d) ஈதர்

32) பைரோ பாஸ்பாரிக் அமிலத்தின் வாய்ப்பாடு
(a) $H_4P_2O_6$ (b) $H_4P_2O_7$ (c) $H_3PO_2$ (d) $H_3PO_3$

33) இராஜ திராவகத்தில் அடர் HCl மற்றும் அடர் $HNO_3$ ன் விகிதம்
(a) 1 : 3 (b) 3 : 1 (c) 2 : 3 (d) 3 : 2

34) $BrF_3$ ஹாலஜன் இடைச்சேர்மத்தில் காணப்படும் பிணைப்பு இரட்டை மற்றும் தனித்த இரட்டை எலக்ட்ரான்களில் எண்ணிக்கை முறையே
(a) 1 & 3 (b) 3 & 2 (c) 5 & 1 (d) 7 & 0

35) விளம்பர பலகைகளின் விளக்குகளில் பயன்படும் வாயு எது?
(a) He (b) Ne (c) Ar (d) Kr

36) 3d வரிசை இடைநிலை தனிமங்களுள், எந்த ஒரு தனிமமானது அதிக எதிர்க்குறி $\left(\frac{M^{2+}}{M}\right)$ திட்ட மின்முனை அழுத்த மதிப்பினைப் பெற்றுள்ளது ?
(a) Ti (b) Cu (c) Mn (d) Zn

37) $V^{3+}$ ல் உள்ள இணையாகாத எலக்ட்ரான்களின் எண்ணிக்கைக்கு சமமான இணையாகாத எலக்ட்ரான்களைப் பெற்றிருப்பது
(a) $Ti^{3+}$ (b) $Fe^{3+}$ (c) $Ni^{2+}$ (d) $Cr^{3+}$

38) அமில ஊடகத்தில், பொட்டாசியம் பெர்மாங்கனேட் ஆனது ஆக்சாலிக் அமிலத்தை இவ்வாறாக ஆக்சிஜனேற்றம் அடையச் செய்கிறது.
(a) ஆக்சலேட் (b) கார்பன் டை ஆக்ஸைடு (c) அசிட்டேட் (d) அசிட்டிக் அமிலம்

39) முதல் இடைநிலை வரிசைத் தனிமங்களின் கடைசி எலக்ட்ரான் ________ ஆர்பிட்டாலில் சேர்க்கப்படுகிறது.
(a) 5 d (b) 4 d (c) 3 d (d) 2 d

40) இடைநிலைத் தனிமங்கள் எளிதாக உலோகக் கலவைகளை உருவாக்குகின்றன, ஏனெனில் அவைகள் ________ பெற்றிருக்கின்றன.
(a) ஒரே அணு எண் (b) எலக்ட்ரான் அமைப்பு (c) ஏறக்குறைய ஒரே அணு உருவளவு (d) மேற்கண்ட ஏதுமில்லை

41) இடைநிலைத் தனிமங்களின் காந்தப் பண்பிற்கு காரணம்
(a) எலக்ட்ரான் தற்சுழற்சி (b) ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான் சுழற்சி (c) (அ) மற்றும் (ஆ) (d) இரண்டும் அல்ல

42) பின்வருவனவற்றுள் எதில் அதிக தனித்த d எலக்ட்ரான்கள் உள்ளன?
(a) $Zn^{2+}$ (b) $Fe^{2+}$ (c) $N^{3-}$ (d) $Cu^{+}$

43) ________ ஆக்சோ நேர் அயனியை உருவாக்குகின்றன
(a) ஆக்டினைட்டுகள் (b) லாந்தனைடுகள் (c) s - தொகுதி தனிமங்கள் (d) p - தொகுதி தனிமங்கள்

44) $Gd^{3+}$ அயனியின் சரியான எலக்ட்ரான் அமைப்பு
(a) $[Xe]4f^{14}$ (b) $[Xe]4^{7}$ (c) $[Xe]4t^{0}$ (d) $[Xe]4f^{6}$

45) ஆக்டினைடுகளின் பொதுவான ஆக்சிஜனேற்ற நிலை
(a) $[Rn]5f^{2-14}\ 6d^{0-2}$ (b) $[Xe]5f^{2-14}\ 5d^{0-2}$ (c) $[Rn]5f^{2-14}\ 5d^{0-2}$ (d) $[Rn]4f^{2-14}\ 5d^{0-2}$

$7s^2$ $5s^2$ $5s^2$ $6s^2$

46) வேறுபட்ட ஒன்றை கண்டறிக

(a) லாந்தனம் (b) சீசியம் (c) தோரியம் (d) புரோமீத்தியம்

47)

| | அ | | ஆ |
|---|---|---|---|
| A | பெர்மாங்கனிக் அமிலம் | i | CrO |
| B | குரோமிக் அமிலம் | ii | $Cr_2O_3$ |
| C | டைகுரோமிக் அமிலம் | iii | $H_2CrO_4$ |
| D | குரோமிக் ஆக்சைடு | iv | $CrO_3$ |
| | | v | $HMnO_4$ |

(a)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |

(b)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (ஆ) | (v) | (iv) | (iii) | (ii) |

(c)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| இ) | (v) | (iii) | (ii) | (i) |

(d)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| ஈ) | (iv) | (iii) | (ii) | (i) |

48) பின்வருவனவற்றுள் 1.73BM காந்த திருப்புத்திறன் மதிப்பினைப் பெற்றுள்ளது எது?

(a) $TiCl_4$ (b) $[CoCl_6]^{4-}$ (c) $[Cu(NH_3)_4]^{2+}$ (d) $[Ni(CN)4]^{2-}$

49) உயர்சுழற்சி $d^5$ எண்முகி அணைவு ஒன்றின் படிகபுல நிலைப்படுத்தும் ஆற்றல் (CFSE) மதிப்பு

(a) $-0.6\triangle$ (b) 0 (c) $2(P-\Delta_0)$ (d) $2(P+\Delta_0)$

50) பின்வரும் அணைவுச் சேர்மங்களில் மாற்றியப் பண்பினைப் பெற்றிருக்காதது எது?

(a) $[Ni(NH_3)_4(H_2O)2]^{2+}$ (b) $[Pt(NH_3)_2Cl_2]$ (c) $[Co(NH_3)_5SO_4]Cl$ (d) $[Fe(en)_3]^{3+}$

51) மைய உலோக அயனியின் முதன்மை இணைதிறன் என்பது அதன்

(a) அணு எண் (b) ஆக்சிஜனேற்ற எண் (c) நிறை எண் (d) அணைவு எண்

52) அணைவுச் சேர்மத்தில் மைய உலோக அயனியின் இரண்டாம் நிலை இணைதிறன் ______________ ஆகும்.

(a) அயனியுறும் இணைதிறன் (b) திசைநோக்கும் பண்புடையது (c) திசைநோக்கும் பண்பற்றது (d) ஆக்சிஜனேற்ற எண்

53) பின்வருவனவற்றுள் எது ஒரு முனை ஈனி ஆகும்?

(a) கார்பனேட்டோ (b) ஆக்சலேட்டோ (c) சயனிடோ (d) en

54) $[Pt (NH_3)_4] [Pd (Cl)_4]$ என்ற அணைவு சேர்மம் காட்டும் மாற்றியம்

(a) அயனியாதல் மாற்றியம் (b) இணைப்பு மாற்றியம் (c) அணைவு மாற்றியம் (d) கரைப்பனேற்ற மாற்றியம்

55) $[Cr (NH_3)_4 ClBr] NO_2$ மற்றும் $[Cr(NH_3)_4 ClNO_2] Br$ ஆகிய இரண்டு அணைவுச் சேர்மங்களும்

(a) இணைப்பு மாற்றியங்கள் (b) அயனியாதல் மாற்றியங்கள் (c) அணைவு மாற்றியங்கள் (d) கரைப்பனேற்ற மாற்றியங்கள்

56) மைய உலோக அயனியின் (n -1) d ஆர்பிட்டால்கள் இனக்கலப்பில் ஈடுபட்டால் அந்த அணைவுச் சேர்மம் __________ எனப்படும்.

(a) வெளி ஆர்பிட்டால் அணைவு (b) இணை சுழற்சி அணைவு (c) உயர் சுழற்சி அணைவு (d) தனித்த சுழற்சி அணைவு

57) $[Ni(CO)_4]$ என்ற அணைவில் நிக்கல் அனுவின் இனக்கலப்பு

(a) $dsp^2$ (b) $sp^3$ (c) $d^2sp^3$ (d) $dsp^3$

58) $[Cu(NH_3)_4]^{2+}$ என்ற அணைவு அயனியின் நிலைப்புத்தன்மையற்ற மாறிலி $1.0 \times 10^{-12}$ எனில், அதன் நிலைப்புத் தன்மை மாறிலி மதிப்பு

(a) $1.0 \times 10^{-12}$ (b) $1.0 \times 10^{12}$ (c) 12 (d) -12

59) ஈத்தீனின் பலபடியாக்கல் வினையில் பயன்படும் வினைவேக மாற்றி

(a) சிக்லர் - நட்டா வினை வேக மாற்றி (b) சீசஸ் உப்பு (c) வில்கின்சன் வினை வேக மாற்றி (d) மேக்னஸ் பச்சை உப்பு

60) பொட்டாசியம் (அணு எடை 39 g $mol^{-1}$) bcc வடிவமைப்பை பெற்றுள்ளது . இதில் நெருங்கி அமைந்துள்ள இரு அடுத்தடுத்த அணுக்களுக்கிடையேயானத் தொலைவு $4.52A^0$ ஆக உள்ளது. அதன் அடர்த்தி
(a) 915 kg $m^{-3}$ (b) 2142 kg $m^{-3}$ (c) 452 kg $m^{-3}$ (d) 390 kg $m^{-3}$

61) அயனிப்படிகங்களில் நேர் மற்றும் எதிர் அயனிகள் ஒன்றொடொன்று ________ மூலம் பிணைக்கப்பட்டுள்ளன.
(a) வலிமை குறைந்த வாண்டர்வால்ஸ் விசை (b) வலிமையான நிலைமின்னியல் கவர்ச்சி விசை (c) ஹைட்ரஜன் பிணைப்பு (d) சகப்பிணைப்பு

62) சாய்சதுர படிக அமைப்பிற்கு பின்வரும் எக்கூற்று சரியானது?
(a) $\alpha=\beta=\gamma=90^o$ (b) $\alpha=\beta=\gamma\neq90^o$ (c) $\alpha=\beta=90^o;120^o$ (d) $\alpha=\gamma=90^o;\ \beta\neq90$

63) பொருள் மையத்தில் உள்ள அணுவினை பகிர்ந்து கொள்ளும் அலகுக் கூடுகளின் எண்ணிக்கை
(a) 1 (b) 2 (c) 4 (d) 8

64) ஒரு முகப்பு மைய கனசதுர அலகுக்கூட்டில் உள்ள மொத்த அணுக்களின் எண்ணிக்கை
(a) 1 (b) 2 (c) 4 (d) 6

65) அறுங்கோண நெருங்கிப் பொதிந்த அமைப்பு என்பது
(a) ABC ABA ______ அமைப்பு (b) ABC ABC ______ அமைப்பு (c) AB BA ______ அமைப்பு (d) ABB ABB ______ அமைப்பு

66) ஒரு வேதிவினையின் போது சேர்க்கப்படும் வினைவேக மாற்றி பின்வருவனவற்றுள் எதனை மாற்றியமைக்கிறது?
(a) என்தால்பி (b) கிளர்வு ஆற்றல் (c) என்ட்ரோபி (d) அக ஆற்றல்

67) ஒரு கதிரியக்கத் தனிமமானது இரண்டு மணி நேரத்தில் அதன் ஆரம்ப அளவில் $\left(\frac{1}{16}\right)^{th}$ மடங்காகக் குறைகிறது அதன் அரை வாழ் காலம்.
(a) 60 min (b) 120 min (c) 30 min (d) 15 min

68) வினை நிகழும் போது, வினைபடு பொருட்களின் செறிவு
(a) அதிகரிக்கும் (b) குறையும் (c) மாறாது (d) அதிகபட்சம் உயரும்

69) ஒரு வினையின் வினை வகை மதிப்பானது ________ ஆக இருக்கலாம்.
(a) பூஜ்யம் (b) பின்னம் (c) முழு எண் (d) மேற்கண்ட அனைத்தும்

70) ஒரு அடிப்படை வினையில், இடம்பெறும் வினைபடு மூலக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை ________ எனப்படும்.
(a) வினை வகை (b) மூலக்கூறு எண் (c) வினை வேகம் (d) வினைவேக மாறிலி

71) பின்வருவனவற்றுள் எவை பூஜ்ய வகை வினை ஆகும்?
i) வளைய புரப்பேனானது புரப்பீனாக மாற்றியமாதல்
ii) அசிட்டோன் அயோடினேற்றம் அடையும் வினையில், அயோடினைப் பொறுத்து வினைவகை.
iii) $H_2$ மற்றும் $Cl_2$ ஆகியவற்றிக்கு இடையேயான ஒளி வேதிவினை.
(a) (i) மட்டும் (b) (i) & (ii) (c) (ii) மட்டும் (d) (ii) & (iii)

72) ஒரு முதல் வகை வினை 99.9% முற்றுப் பெறுவதற்கு தேவைப்படும் காலம்
(a) 2 $t_{1/2}$ (b) 5 $t_{1/2}$ (c) 10 $t_{1/2}$ (d) 100 $t_{1/2}$

73) வினைவேக மாற்றி ஒரு வினையின் கிளர்வு ஆற்றலை
(a) அதிகரிக்கிறது (b) குறைகிறது (c) மாற்றுவதில்லை (d) மேற்கண்ட எதுவுமில்லை

74) A+B →C என்ற வினையின் வேக விதியானது வினைவேகம் $=K[A][B]^2$ எனில் A மற்றும் B ன் செறிவுகளை மாறா கன அளவில் இரு மடங்காக்கும் போது, வினையின் வேகம் எத்தனை மடங்கு அதிகரிக்கும்?
(a) இரண்டு (b) நான்கு (c) எட்டு (d) பதினாறு

75) அதிக $E_a$ மதிப்புகளை உடைய வினைகளின் வினை வேகம்
(a) மிக அதிகம் (b) மிகக் குறைவு (c) மிதமான வேகம் (d) அதி விரைவு

*******************************************

1) (a) Al
2) (d) உலோக சல்பைடுகளுக்கு, கார்பன் மற்றும் ஹைட்ரஜன் ஆகியன தகுந்த பொருத்தமான ஒடுக்கும் காரணிகளாகும்.
3) (c) சோடியம்
4) (b) கரையாத மாசுக்களை, கரையும் மாசுக்களாக மாற்ற
5) (a) கார்பன் ஒடுக்கம்
6) (a) வெள்ளி (Silver)
7) (b) தூய்மையற்ற காப்பர்
8) (b) $\Delta G^0$ Vs T
9) (d) ஆங்லசைட்
10)
(b) பிரௌசிடைட்
11)
(b) சல்பைடு தாது
12)
(b) எதிர்க்குறி
13)
(c) அதிக எதிர்க்குறி மதிப்பினை
14)
(b) கிராபைட்
15)
(a) Al < Ga < In < Tl
16)
(b) அதிகரிக்கிறது
17)
(c) இடது புறம் கீழ்ப்பகுதி
18)
(c) மந்த இணை விளைவு
19)
(a) கிரா.ஃ.பைட்
20)
(c) நேர்கோட்டு வடிவம்
21)
(a) அமிலத்
22)
(b) Li $Al(SiO_3)_2$
23)
(b) $P_4$ (வெண்மை) மற்றும் $PH_3$
24)
(b) நைட்ரசோ .ஃ.பெர்ரஸ் சல்பேட்
25)
(d) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
26)
(a) HI
27)

(d) $Cl_2 > Br_2 > F_2 > I_2$
28)
(b) $N_2$
29)
(a) $NO_2$
30)
(d) ஆஸ்வால்ட் முறை
31)
(b) நீர்
32)
(b) $H_4P_2O_7$
33)
(b) 3 : 1
34)
(b) 3 & 2
35)
(b) Ne
36)
(a) Ti
37)
(c) $Ni^{2+}$
38)
(b) கார்பன் டை ஆக்ஸைடு
39)
(c) 3 d
40)
(c) ஏறக்குறைய ஒரே அணு உருவளவு
41)
(a) எலக்ட்ரான் தற்சுழற்சி
42)
(c) $N^{3-}$
43)
(a) ஆக்டினைட்டுகள்
44)
(b) $[Xe]4^7$
45)
(a) $[Rn]5f^{2-14}\,6d^{0-2}\,7s^2$
46)
(c) தோரியம்
47)
(b)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (ஆ) | (v) | (iv) | (iii) | (ii) |

48)
(c) $[Cu(NH_3)_4]^{2+}$
49)
(b) 0
50)
(d) $[Fe(en)_3]^{3+}$
51)

(b) ஆக்சிஜனேற்ற எண்

52)

(b) திசைநோக்கும் பண்புடையது

53)

(c) சயனிடோ

54)

(c) அணைவு மாற்றியம்

55)

(c) அணைவு மாற்றியங்கள்

56)

(b) இணை சுழற்சி அணைவு

57)

(c) $d^2sp^3$

58)

(b) $1.0 \times 10^{12}$

59)

(a) சிக்லர் - நட்டா வினை வேக மாற்றி

60)

(a) 915 kg $m^{-3}$

61)

(b) வலிமையான நிலைமின்னியல் கவர்ச்சி விசை

62)

(b) $\propto=\beta=\gamma\neq90^{o}$

63)

(a) 1

64)

(c) 4

65)

(c) AB BA ______ அமைப்பு

66)

(b) கிளர்வு ஆற்றல்

67)

(c) 30 min

68)

(b) குறையும்

69)

(d) மேற்கண்ட அனைத்தும்

70)

(b) மூலக்கூறு எண்

71)

(d) (ii) & (iii)

72)

(c) 10 $t_{1/2}$

73)

(b) குறைகிறது

74)

(c) எட்டு

75)

(b) மிகக் குறைவு